Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 40—No. 4

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 40 | பிலவங்க சித்திரை 1967 ஏப்ரல் | இதழ் 4

உள்ளுறை பக்கம்

பத்ததிகள் — 73
அறப்பள்ளீச்சுரர் கோயில் ... 81
அரசு வள்ளல்—ஆளுடைய பிள்ளையார் ... 85
நிறை பெருங் கருணை ... 90
பழந் தமிழர் சமய நிலை ... 94
மதிப்புரை ... 101

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
தவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

30–4–'67 ஞாயிறன்று காலை 9–30 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் நிகழும். மாதக்கணக்கு சரிபார்த்தல், சமாஜத் தேர்வு முதலிய பொருள்கள் பற்றிய முடிவுகள் தீர்மானிக்கப்பெறும். உறுப்பினர்கள் யாவரும் தவருது வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகிருர்கள்.

துணைச்செயலாளர்.

சமாஜச் செய்திகள்

கீழ்க்காணும் அன்பர்கள் நம் சமாஜப் புது ஆயுள் உறுப்பினர்களாயுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

அவர்கள் விவரம் வருமாறு :—

1. துரை நாராயணசாமி பிள்ளை அவர்கள்,
   அறுவை நிலையம்,
   41, நீலக்கிடங்கு வீதி, காரைக்கால்.

2. R. சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்கள்,
   குமரன் கோயில் கீழவீதி,
   மஞ்சக்கொல்லை, அந்தணப்பேட்டை,
   தஞ்சைமாவட்டம்.

3. மு. சிங்காரவேலு முதலியார் அவர்கள்,
   பிள்ளையார் கோயில் சந்நிதி,
   மஞ்சக்கொல்லை, தஞ்சைமாவட்டம்.

4. அ. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள்,
   பிள்ளையார் கோயில் தெரு,
   மஞ்சக்கொல்லை, அந்தணப்பேட்டை,
   தஞ்சைமாவட்டம்.

5. S. சண்முக முதலியார் அவர்கள்,
   26, முத்திவிநாயகர் தெரு,
   மடப்புரம், திருவாரூர், தஞ்சைமாவட்டம்.

(சேர்த்து அனுப்பியவர் : திரு. R. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், கும்பகோணம்.) இவர்களைப்போன்று பிற பெருமக்களும் ரூ. 50/– செலுத்தி ஆயுள் உறுப்பினராமாறு அனைவரையும் வேண்டிக்கொள்கின்ருேம்.

(துணைச்செயலாளர்)

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 40	பராபவ சித்திரை 1967 ஏப்ரல்	இதழ் 4

பத்ததிகள்

ஆசிரியர்

பின் வந்த சைவ சமய நூலாசிரியர்கள், சாத்திரம் செய்து சமயத்தை வளர்த்த ஆசாரியர்களை இரு பிரிவாகப் பிரித்தனர். இவ்விரு வகையராவார், கன்ம சித்தாந்த குரவர், ஞான சித்தாந்த குரவர் என்போர். இவர்களுள், கர்ம நூல் செய்தோரை விட ஞான நூல் செய்தோர் பல மடங்கு உயர்வு என்று நூல்கள் சொல்லும். ஞான நூல் செய்தோர், மெய்கண்டாரும், அவர் வழி வந்த சந்தான குரவரும், ஏனைய சந்தான பரம்பரையினரும் ஆகிய ஞான ஆசாரிய பரம்பரையினர். கர்ம சித்தாந்த குரவர் என்போர் பெரும்பான்மை சிவாசாரியர்களே. இவர்கள் வட மொழியில் நூல் செய்தார்கள். தங்கள் நூல்களுள் இவர்கள் பொதுவாக ஞானம் கூறினும், சிறப்பாக, கிரியா பாதமாகிய கர்ம காண்ட சாத்திரங்களே செய்தமையின், இவர்கள் கர்ம சித்தாந்த குரவர் எனப்பட்டனர். சிவாசாரியர் மிகப் பலர்; இவர்கள் செய்த நூல்களும் மிகப்பல. இந்நூல்களுள் ஒரு பகுதியாகிய பத்ததியைப்பற்றிமட்டும் இங்கு ஆராய்வோம். இப் பத்ததிகள் சைவ சமயத்தில் மட்டுமே விரிவாக எழுந்தன என்று அறிகிறோம்.

கிரியை கூறுவதற்கென்றே எழுந்த நூல்கள் பத்ததி எனப் பெயர் பெறுகின்றன. பத்ததி, நெறி, வழி, முறை. இப்பத்ததிகள் 18 என்பது ஒரு வரலாறு. இக் கருத்துக்கு மூலம், நந்திகேசுவரரிடம் தொடங்குகிறது. அவரிடம் உபதேசம் பெற்றவர் முனிவர் நால்வர். சனகர்—புஷ்பகிரி மடம் தோற்றுவித்தார்; சனாதனர்—கோளகி மடம்; சனந்தனர்—ஆமண்டம் (அல்லது ரணபத்ரம்); சனற்குமாரர்—ஆமர்த்தக மடம். இந்த நான்கின் வழியே பதினெண் சிவாசாரிய பரம்பரைகள் பெருகின. அப்பதினெண்மரும் 18 பத்ததிகள் செய்தனர் என்பது வரலாறு. இவ்வரலாறுகள் தோன்றிய காலம் 15-ஆம் நூற்றாண்டு என்று திட்டமாய்ச் சொல்லலாம். அந்த நூற்றாண்டில் எழுந்த திரு ஆனைக்கா உலா 'பதினெண்மடத்து முதலிகளும்' என்று குறிப்பிடுகிறது; இவை நாம் இன்று அறிந்திருக்கிற சைவ மடங்கள் அல்ல.

இப்பதினெண் மடத்தாரும் சிவாசாரியர்; இவர்கள் பெயரில் சில பேதங்கள் உண்டு, இவர்கள் தூர்வாசர், பிங்களர், உக்ரஜோதி, சுபோதர், ஸ்ரீகண்டர், விஷ்ணுகண்டர், வித்தியா கண்டர், ராமகணடர், ஞானசிவம், ஞானசங்கரர், சோமசம்பு, பிரமசம்பு, திரிலோசன சிவம், (சம்பு), அகோரசிவம், பிரசாத சிவம், ராமநாத சிவம், ஈசான சிவம், வருண சிவம் ஆகிய பதினெண்மர். (விஷ்ணு கண்டர்—நாராயண கண்டர்; ஞானசிவம்—ஞானசம்பு.) இவர்களுள் தூர்வாசர், பிங்களர், சுபோதர், ஞான சங்கரர், பிரசாத சிவம், ராமநாத சிவம் என்போரை நீக்கி, இருதய சிவம், ஈசுவர சிவம், சத்யோஜோதி, விபூதி கண்டர், நீலகண்டர் வைராக்கிய சிவம் என்போரைச் சேர்த்துச் 'சைவ பூஷணம்' கூறும்.

ஞானாமிர்தம் என்ற தமிழ் நூலின் வரலாற்றால் இந்த சிவாசாரியர் மடங்கள் பற்றிய வரலாறு சிறிது விளக்கமாகின்றது. இதன் பதிப்பாசிரியர் அவ்வை—சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், பல செய்திகளைத் தொகுத்துக் கூறி இருக்கிறார்கள். வடநாட்டில் பழங் காலத்தில் மத்தமயூரசந்தானம் ஒன்று இருந்தது. அதன்

கிளைகள் பல, வழி வழி வந்த ஆசாரியரும் பலர். இவர்களுள் சதாசிவர், இருதயசிவர், வியோமசிவர், என்ற பெயர்களும் காணப்படுகின்றன. ஆமர்த்தகத் தீர்த்தநாதர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் இருந்த ஆமர்த்தகத்திலிருந்து சிவபுரி சந்தானம் என்பது வடநாட்டில் தோன்றி விளங்கிற்று. இருதய சிவர், வைத்தியநாத மடம், நகுலேசுரர் மடம் என்ற இரண்டுக்கும் தலைவராக இருந்து, பின் தம் சீடரான அகோர சிவரை நகுலேச மடத்துக்குத் தலைவராக்கினார். பின்னும் மத்த மயூர சந்தானத்துள் விமலசிவர், சாந்தசிவர், தற்புருடசிவர், சத்திசிவர், கீர்த்திசிவர் என்போர் குரவர்களாக விளங்கி இருந்தனர்.

துருவாசர் வழி வந்தவர்கள் சற்பவசம்பு, சோமசம்பு. வாம சம்பு, விமல சிவர், விசுவேசுவர சம்பு முதலியோர், கோளகி சந்தானத்தில், சோம சம்பு, ஈசான சிவம் முதலியோர் இருந்தனர். ஈசான சிவம் சித்தாந்த பத்ததி எழுதினார்; பஞ்சாக்கர குரு—ஸ்நபனசாராவளி; மற்றோர் ஈசான சிவம்—சித்தாந்த சாரம்; சோமேசுரர்—சித்தாந்த இரத்தினாகரம்; வேத ஞான சிவர்—ஆத்மார்த்த பூஜா விதி ஆகிய நூல்கள் எழுதினர்.

கோளகி சந்தானத்தில் விசுவேசுரர் என்ற ஆசாரியர் இருந்து தமிழ்நாட்டில் பல இடங்களிலும் கிளைமடங்களை நிறுவினார். திருவானைக்காவில் தற்புருட சிவம், பிரான் மலையில் ஈசான சிவம், திருவொற்றியூரில் வாகீசுர பண்டிதர் முதலியோர் சிறப்புடையவர்கள்.

இச்செய்திகள் யாவும் கல்வெட்டுத் துறை அறிக்கைகளால் விளக்கமாவன. இவ்வாசாரியர்கள் விளங்கிய காலம் 11–ஆம் நூற்றாண்டு முதல் 16–ஆம் நூற்றாண்டு வரை என்று சொல்வர். ஒரே பெயருடைய ஆசாரியர்கள் பலர் இருந்திருக்கிறார்கள்.

தேவகோட்டை சிவாகம சங்கத்தார், சிவாசாரியர் செய்த பலபத்ததிகள் முதலியன வெளியிட்டிருக்கிறார்கள். இவற்றையும். இன்று கிடைக்கும் பிற நூல்களையும் நன்கு ஆராய்ந்து, சில செய்திகளை இனிக் கூறுவோம். பொது

வாக இச்சிவாசாரியர் அனைவரும் ஒரே காலத்தில் ஒரே இடத்தில் இருந்தவர்கள் அல்லர்.

12—15 ஆகிய நூற்றாண்டுகளில் இவர்கள் வாழ்ந்து நூல் செய்தோராவர் என்று இப்போது கூறமுடியும். பதினெண்மரும் 18 பத்ததிகள் செய்தார்கள் என்று வரலாறு கூறுகிறது. இவை அவரவர் பெயரால் வழங்கும். சோமசம்பு பத்ததி, கிரியா காண்ட க்ரமாவளி என வழங்கும்; 1860 சுலோகங்கள் கொண்டது. அகோரசிவா சாரியர் பத்ததி கிரியாக்ரமத்யோதிகை என்றும் கிரி யாக்கிரம பத்ததி என்றும் வழங்கும். இதன் மூன்றும் பாகம் மட்டும் சைவ சோடசப் பிரகாசிகை என்ற தனிப் பெயருடையது. முதல் இரு பாகங்களும் பூர்வ அபர பாகங்கள் எனப் பெயர்பெறும்; இரண்டும் 279 சுலோ கங்கள். திருவாரூர் நிர்மல மணிதேசிகர் என்பவர் முற் காலத்திலேயே இவற்றுக்குப் பிரபை என்ற பெயருடைய வடமொழி வியாகியானம் எழுதி இருக்கிறார். அகோர சிவாசாரியரை இவர் அபர பரமேசுவரன் என்றே குறிப் பிடுகிறார்.

இனி ஏனைய சிவாசாரியர் செய்த பத்ததிகளில், திரி லோசன சிவாசாரிய பத்ததி சித்தாந்த சாராவளி அச்சிட் டோராலும் (1887), ஈசான சிவகுரு பத்ததி என்பது, சோமசம்பு பத்ததியை அச்சிட்டோரால் (1934) பல இடங்களிலும் எடுத்துக் குறிப்பிடப்பட்டுள்ளன; இந் நூல்கள் ஏட்டுவடிவிலேனும் இன்று கிடைக்கும்போலும். இதுவன்றி, அகோரசிவம் தமது உரைகளுள் பிரம சம்பு பத்ததி, வருண பத்ததி, ராமநாத பத்ததி என்பவற்றைக் கூறுகின்றார். இவை பெயரளவில் மட்டுமே அறியப் படுவன; சில பத்திகள் மேற்கோளாகவும் வந்துள்ளன. முதல் இரண்டையும் மிகச் சமீபகாலத்தில் வெள்ளியம்பல வாணத் தம்பிரான் (17 நூ.) குறிப்பிடுகிறார்; எனினும், நூல்கள் கிடைக்குமா என்பது தெரியவில்லை. அகோர சிவபத்ததி வியாக்கியானத்தில் பின்வரும் நூல்கள் எடுத் தாளப்பட்டுள்ளன; கிரியாக்கிர மண்டன பத்ததி, நடராஜ பத்ததி, போஜதேவ பத்ததி, மிருகேந்திர பத்ததி

அதன் வியாக்கியானம், பட்ட சிவோத்தமர் செய்த வருண பத்ததி வியாக்கியானம் என்பன. இவை இன்று உள்ளனவா என்பது தெரியவில்லை. இந்நூலாசிரியர்களுள் போஜதேவர் என்பவர் தத்துவப் பிரகாசிகை என்ற நூல் செய்தவர்; இதற்கு அகோர சிவமே உரை எழுதியிருக்கிறார்.

இப்பத்ததிகாரருள் சிலர் தந்தைமகன் என்ற தொடர்பும், சிலர் குரு சீடர் என்ற தொடர்பும் உடையவர்கள். கேடகரின் புதல்வர் சத்தியோ ஜோதி; இவர் உக்ரஜோதியின் சீடர். ஈசான சிவத்தின் சீடர் விமலேசர்; இவர் சீடர் அஸ்திர சிவம்; இவர் சீடர் சோமசம்பு; இவர் கோளகி மடத் தலைவர்; இவர் பௌத்திரர்போலும். ஞானசிவம் என்னும் ஞானசம்பு, போஜதேவர் போஜராஜ குரு என்றும் சொல்லப்பெறுகிறார்; இவர் சிவாசாரியரல்லர்; இவர் உத்துங்க சிவாசாரியரின் சீடர். உத்துங்கர் தம் பெயரால் ஒரு பத்ததி செய்ததாகத் தெரிகிறது. சர்வாத்ம சம்புவின் சீடர் அகோர சிவாசாரியர்.

கிடைக்கிற பத்ததிகளில் சோமசம்பு பத்ததியே சைவ சித்தாந்தம் என்றும், அகோர சிவத்தின் பத்ததி சிவசம வாதக் கலப்புடையதென்றும் சித்தாந்த நூல் உரையாசிரியர்கள் கூறுகிறார்கள்.

இதுவரை சொல்லப்பட்டவை பதினெண் மடங்களின் தொடர்பாக எழுந்த பத்ததிகளாகும். இதே காலத்தில் எழுந்தவை பின்னும் சில உள்ளன. சூரியனார் கோயிலாதீனத்தின் மூல ஆசாரியர்கள் இச் சந்தானங்களுக்கு உரியவர்களல்லர். இவர்கள் வேறு; இவர்களுள் ஒருவரான சதாசிவசிவாசாரியர் சதாசிவப் பத்ததி செய்தார். இவர் பெயரை வைத்து அவ்வாதீனம் சதாசிவ சந்தானம் என்றும் சொல்லப்பெறும். அவர் காலம் சுமார் கி. பி. 1475 ஆகலாம். அவருக்குப் பின் மூன்றும் தலைமுறையில் வந்தவரே சிவாக்கிர யோகிகள். (கி. பி. 1564.) இவர் கிரியா தீபிகை என்ற சிவாக்கிர பத்ததியும், சைவ சந்நியாச பத்ததியும் செய்தவர். கி. பி. 1400 இல் வாழ்ந்த

காழிக் கண்ணுடையவள்ளல் தமது வள்ளலாதீனத்துக்கு மூல நூலாக, குகபத்ததி என ஒரு நூலைக் கொண்டார் என்று அவர் வரலாறு கூறுகிறது; இது சிவாசாரியர் செய்ததா, இதன் வரலாறு என்ன என்பவை விளங்க வில்லை.

இவை போக, வெள்ளியம்பலவாணத் தம்பிரான் உரைகளால், சௌந்தரநாதாசாரியர் பத்ததி, சைவசமயா சார பத்ததி, அவாந்தரசைவர் பத்ததி எனப் பல நூல்கள் தெரியவருகின்றன. இவை சிவாசாரியர் பரம்பரைக் குரியனவாகலாம். இவை போக மறைஞான தேசிகர் ஆன் மார்த்த பூஜா பத்ததி என ஒன்று செய்தார் என்றும் இவர் கூறுகிறார். இதுவும் வடமொழியே. இத்தேசிகர் சிவா சாரியர் அல்லர்; வேளாளர் (பண்டாரம்) என்பது இங்குக் கருதத் தக்கது. இந்நூல் பிற பத்ததிகள் போலக் கிரியைப் பகுதிகள் அனைத்தையும் கூறாமல், ஆன்மார்த்த பூசையாகிய சுருங்கிய ஒரு பொருளையே கூறும்போலும். இந்நூலின் காலம் 1500—1525 ஆதல் கூடும்.

இதுகாறும் கூறியவற்றால், பத்ததி என்பது வட மொழியில் எழுதப்பெற்ற ஒரு சைவ சாத்திரம் என்றும், இது கிரியைப் பகுதி ஒன்றையே ஆகமப் பிரமாணங்க ளுடன் விரிவாக எடுத்துரைப்பதென்றும், சிவாசாரியர் களே பத்ததி செய்தார்கள் என்றும் அறிகிறோம்.

பத்ததிகளின் காலத்தைக் குறித்து ஒரு வார்த்தை கூறலாம். மெய்கண்டார் சிவஞானபோதம் செய்தபின், ஞான பரம்பரை வளர்ந்தது. அவர் காலம் 13–ஆம் நூற் றாண்டின் இடைப்பகுதி. 16–ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இவ்வளர்ச்சி தொடர்பாகப் பெருகியது. பெரும் பான்மையும் இவ்வளர்ச்சி சைவர்களால் ஏற்பட்டது. அருணந்தி, உமாபதி. சிவாக்கிரயோகி போன்றார் சிவா சாரியராயினும், பொதுவாக இச்சைவஞான சாத்திரங்கள் சைவர்களின் ஆதீனத்திலேயே இருந்து வந்தன.

இவர்கள் ஞான சித்தாந்த குரவர்களாகி தமிழில் சாத்திரங்கள் செய்யவே, உடன் காலத்திருந்த சிவாசாரி

யர்கள் தாங்களே தங்களைக் கர்ம சித்தாந்த குரவர்களாகப் பிரித்து வகுத்துக்கொண்டார்கள் என்று கருத வேண்டியிருக்கிறது. சகலாகம பண்டிதரா யிருந்த அருணந்தி சிவாசாரியர், மெய்கண்டார் என்ற ஓர் இளம் சைவப் பிள்ளைக்குச் சீடராகித் தமது சகலாகமங்களையும் கைவிட்டுத் தமிழிலேயே ஞானசாத்திரம் செய்தாராகவே, ஏனைய சிவாசாரியர் தங்கள் வடமொழி மரபைக் கைவிடத் துணியாமல், அதை இன்னும் நன்றாய் நிறுவிக்கொள்ள முற்பட்டார்கள் என்று நாம் முடிவு செய்வது பிழையாகாது. இம்முயற்சியின் விளைவே 18 சிவாசாரிய மடங்களும் அவ்வழியினர் செய்த வடமொழி சாத்திர நூல்களும். இவற்றுள் ஞான சாத்திரங்கள் உள்ளன. இருப்பினும், பெரும்பான்மை கன்மப் பகுதி கூறும் கிரியா பத்ததிகளே. கிரியைக்கு ஏற்ற அளவு சரியையும் இவற்றுள் தழுவப் பெற்றிருக்கிறது.

சோமசம்பு தம் பத்ததியை விக்ரமசம் 811-இல் (கி.பி. 754) செய்தார் என்று அந்நூலின் இறுதி சுலோகம் கூறுகிறது. எனினும் பொதுவாக, கன்ம சித்தாந்தகுரவர் என்ற பாகுபாட்டையும், அவர்கள் நூல் செய்த நிலையையும், செய்த நூல்களையும், ஒரு தொகுப்பாகக் காணும்போது, இவர்களனைவரும் மெய்கண்டாருக்குப் பின்னரே நூல் செய்தார்களென்று முடிவு செய்ய நேருகிறது. திரிலோசன சம்பு செய்த சித்தாந்த சாராவளி கிரியாபாத வியாக்கியான இறுதியில் பூர்வகதை என்று பின் வருமாறு குறிப்பிட்டுள்ளது. "ராஜேந்திர சோழ ரென்னும் பேருள்ள சோழராஜனொருவன் பூமியாளும் காலத்தில் கங்கா ஸ்நானத்துக்குப் போனபோது, அவ்விடத்தில் சைவாசாரியர்களைக் கண்டு ஸ்நானம்செய்து திரும்பிவரும் போது அந்தச் சைவாசாரியர்களை அழைத்துக்கொண்டு வந்து தன்னுடைய ராஜ்ஜியத்தில் ஸ்தாபித்தான். அது முதல் காஞ்சி மண்டலத்திலும் சோழ மண்டலத்திலும் எங்கும் சைவ சம்பிரதாயம் விஸ்தாரமாயிற்றென்றறிக." இங்கு சைவ சம்பிரதாயம் என்பது சிவாசாரியர் பரம்பரை என்றே பொருள்படும். மற்றப்படி, சைவ சமயாசாரியர்களும் திருமுறைகளும் சந்தான ஆசாரியர்களும் தோன்

றிய நாட்டில் வடக்கேயிருந்து சம்பிரதாயம் வந்தது என்று கூறுவதில் பொருள் இல்லை. ராஜேந்திர சோழன் கங்கை கொண்ட முதலாம் ராஜேந்திரன்; கி. பி. 1012—44; இது பூர்வகதை என்றமையால், இதற்கு இருநூற்றுண்டு களின் பின் என்று கொண்டாலும், 13-ஆம் நூற்றுண்டின் மத்தியாகிறது. இது மெய்கண்டார் காலம். இக்காலத்தில் சிவாசாரியர் பல்கினர் என்று கொள்வதில் தடையில்லை.

திரிலோசன சம்புவும் ஏனைய சிவாசாரியர் பெரும் பான்மையோரும் இவ்வாறு 13–ஆம் நூற்றுண்டிலும் பின்னரும் வாழ்ந்திருந்து வடமொழி நூல்கள் மூலம் சைவம் வளர்த்தார்கள் என்று கூறுவது பொருந்தும். சோமசம்புவின் வரலாறு பின்னும் ஆராயத் தக்கது. ஆமர்த்தக மடத்தை வளர்த்தவர் வியாபக சம்பு என்று சாராவளியில் அதே இடத்தில் சொல்லப்பட்டுள்ளது.

சிவாசாரியர் பலர் குரு என்று பெயர் வைத்துக் கொண்டனர்; ஈசான சிவ குரு, சித்த குரு, என்ற வழக்குகளைக் காண்க. அங்ஙனமே, சிலர் பட்டர் எனலு முண்டு; பட்டவித்தியா கண்டர், பட்டராம கண்டர், சூரியபட்டர் காண்க:

பத்ததிகள் சரியையும் நித்திய விதி, நைமித்திக விதி, காமிய விதி என்னும் மூவகை விதியும் கூறுமாயினும், சூரிய சிவாசாரியர் கூறுவது இங்குக் கருதத்தக்கது. இவர் அகோர சிவாசாரியருக்கு உடன்காலத்தவர், அல்லது சற்று முற்பட்டவர்: "வேதத்தில் கர்ம காண்டத்தில் கூறிய காமிய கன்மம். உபாசனு காண்டத்தில் கூறிய பஞ்சாக்கர விரோதமான வித்தைகள், ஞான காண்டத் தில் கூறிய பரமாத்ம ஜீவாத்ம ஐக்கியம் என்னும் இவை சைவசித்தாந்திகளால் தள்ளத் தக்கன; ஏனைய வேதமும் ஆகமமும் ஒன்றுபோலக் கொள்ளத்தக்கன." இக் கூற்று பத்ததிகள் எழுதுவதற்குரிய நியாயத்தை விளக்குகிறது. இவை வேதமரபை விலக்கி, சைவ சித்தாந்த மரபையொட் டிக் கர்ம காண்டப் பகுதி கூறுவதற்கென்றே எழுந்தன வாகும்.

அறப்பள்ளீச்சுரர் கோயில்

— காலாயுதக்கொடியோன் —

இடம் :

கடை ஏழு வள்ளல்களில் ஒருவனுன வல்வில் ஓரி என்பான் ஆண்டுவந்தது கொல்லிக்கூற்றம். இக்கொல்லிக் கூற்றத்தில்தான் கொல்லிமலை வானுயர நிமிர்ந்து நிற்கின்றது. இம்மலையில் பதினுன்கு நாடுகள் உள்ளன. இவற்றுள் ஒன்ருகிய வளப்பூர் நாட்டில் அறப்பள்ளி என்ற ஊரில் அறப்பள்ளீச்சுரர் கோயில் அமைந்துள்ளது.

வழி :

இக்கோயிலுக்குச் செல்ல இருவழிகள் உள்ளன. ஒன்று நாமக்கல்லிலிருந்து கொலலிமலைப் பகுதியாகிய சோளக்காடு வரைக்கும் பஸ்ஸில் செல்லலாம். அங்கிருந்து நடைபாதை வழி ஒன்றும் சிறு சாலை வழி ஒன்றும் செல்கின்றன. இவ்விரு வழிகட்கும் இருகல் தொலைவுதான் அதிகம். மற்ருெரு வழி, திருச்சித்துறையூர்—எறக்குடி செல்லும் பஸ் வழியில் பச்சைப்பெருமாள் பட்டியில் இறங்கி நான்கு மைல் தொலைவில் உள்ள புளியஞ்சோலை சென்று அங்கிருந்து ஏழு மைல் நடந்து கோயிலை அடையலாம். இவை தவிர ஆங்காங்கு நடைபாதை வழிகள் பல உள்ளன. எவ்வழியில் சென்ருலும் கோயிலை அடைய பத்து மைல் நடந்தே சென்ருகவேண்டும்.

கோயில் அமைந்த கதை :

மலைவாழ் மக்கள் கோயில் அமைவதற்கு முன்பு, இக்கோயில் இன்று அமைந்துள்ள இடத்தை உழுது பயிர் செய்து வந்தனர் என்றும், ஒரு நாள் ஏர் உழுதுகொண்டிருக்கும்பொழுது, நிலத்திற்கடியில் புதையுண்டிருந்த இலிங்கத்தின் தலையில் (அறப்பள்ளீச்சுரர் தலையில்) கொழுகுத்திக் குருதி வந்ததென்றும் அதனைக் கண்ட மலை

வாசிகள் அவ்விடத்திலேயே ஒரு பச்சைப் பந்தல் போட்டு அதன்கீழ் இறைவனை எழுந்தருளச் செய்து அது முதல் ஆராதனை நடத்தி வணங்கி வருகின்றனர் என்றும் கூறுகின்றனர்.

இக்கோயில் அமைவதற்கு முன்பு இவ்விடத்தில் மச்சரிஷி என்னும் முனிவர் மக்களுக்கு அறங்களைப் போதித்து நல்லறிவு புகட்டி நெடுநாள் வாழ்ந்து வந்தார் என்றும், அவர் மக்களுக்கு அறங்களைப் போதித்தமையால் அவர் வாழ்ந்த இடம் அறப்பள்ளியாயிற்றென்றும், அவர் இறந்த பின் அவரை அவ்விடத்திலேயே புதைத்து நடுகல் எடுப்பித்தனர் என்றும், அந்நடுகல்லே நாளடைவில் மக்களால் தெய்வமாகக் கொண்டாடப்பட்டு வந்ததென்றும், அவ்விடமே இன்று அறப்பள்ளி, அம்முனிவர் நடுகல்லே இன்று அறப்பள்ளீச்சுரர் என்றும் மற்றொரு வரலாறு கூறுகிறது.

கோயிலின் அமைப்பு :

இக்கோயில் ஐயாற்றின் தென்கரையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதன் நீளம் 140 அடி, அகலம் 70 அடி. கருவறை விமானம் 30 அடி உயரம். மகா மண்டபத்தில் வழக்கம்போல் தாயம்மாள் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. தாயம்மாளுக்கு நேரே தென் மதில் சுவர் ஓரமாக சுப்பிரமணியர் சந்நிதி வடக்கு நோக்கியுள்ளது. ஒரே நிலையில் நின்று அறப்பள்ளீசர், தாயம்மாள், முருகன் மூவரையும் வணங்கமுடியும்.

உட்பிராகாரத்தில் தென்திசையில் விநாயகரும் தட்சிணாமூர்த்தியும், மேற்குப் பக்கத்தில் விசுவநாதர், விசாலாட்சி, வீரபத்திரர், காளி முதலிய தெய்வங்களும், வடக்கில் சண்டேசர், பைரவர் கோயில்களும் அமைந்துள்ளன. சுப்பிரமணியர் சந்நிதிககு மேற்கில் நால்வர்களும், கோயிலின் பிரதான வாயிலுக்கு வெளியில் மூன்று ஆடவர் கற்

சிலைகளும் அமைந்துள்ளன. இக்கோயிலில் உள்ள மண்டபமும் தூண் வரிசைகளும் கவர்ச்சியாக அமைந்துள்ளன. இக்கோயில் தலம், மூர்த்தி, தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது.

தீர்த்தங்கள் :

இக்கோயிலின் நேர் கிழக்காக மூன்று கல் தொலைவில் ஐயாற்று அருவி (நீர் வீழ்ச்சி) உள்ளது. இது இரண்டாகப் பிரிந்து 250 அடி உயரத்திலிருந்து விழுகின்றது. பெரிய நீர்வீழ்ச்சியை ஆகாசக் கங்கையென்றும் ஆகாசத் தீர்த்தம் என்றும் கூறுவர். சிறியதைச் சுப்பிரமணியர் தீர்த்தமென்பர். ஐயாறு, மலையிலுள்ள பல மூலிகைகளைக் கொண்டு வருவதால் இத் தீர்த்தங்களில் குளித்தால் பிணிகள் நீங்கும். இதனால் இத் தீர்த்தங்களாலும் இத் தலம் சிறப்புடையது.

சிலைகள் :

இக்கோயிலில் பன்னிரண்டு உற்சவ மூர்த்தி சிலைகள் உள்ளன. எல்லாச் சிலைகளிலும் சிறப்புடையது, பஞ்சலோகத்தாலான ஆனந்தத்தாண்டவமூர்த்தியே. இம்மூர்த்தி மிகவும் பழமை வாய்ந்தவர் ; சாந்தமே உருவாகக் கொண்டவர் ; சிறிது தேய்வு கண்டுள்ளார் ; இவர் திருவாசியுடன் $2\frac{3}{4}$ அடி உயரமுடையவர். சிவகாமி சிலை பஞ்ச லோகத்தால் ஆனது ஒன்று உள்ளது. இவ்விரு சிலைகளும் சோழர் காலச் சிலைகள் ; மற்றைய சிலைகள் அனைத்தும் செம்பு, பித்தளை, வெண்கலம், ஆகிய மூன்றின் கலப்பால் செய்யப்பட்டவை. அவை சந்திரசேகரர், சுப்பிரமணியர், தேவியர், சோமாஸ்கந்தர், விநாயகர், மாணிக்கவாசகர், துர்க்கை முதலியன. முகம்மதியர் காலத்தில் பூமிக்குள் மறைத்து வைத்திருந்து பின்னர் வெளிப்படுத்தப்பட்டன என்று கூறுகின்றனர்.

திருவிழா :

ஆண்டுதோறும் ஆடி 17, 18, 19 ஆம் நாட்களில் திருவிழா நடைபெறுகின்றது. ஆடிப் பதினெட்டாம் நாள் சிறப்பு வாய்ந்தது. இக்காலில் மலைவாழ் மக்களும் கீழ்ப் பகுதி மக்களும் இருபதாயிரம் பேர் வந்து வழிபடுகின்றனர். இக்கோயிலில் முன்பு தேர்விழா நடைபெற்று வந்தது. இப்பொழுது எடுப்புத் தேர் மட்டும் உள்ளது. தேர்க் கட்டைகள் பல இக்கோயிலில் உள்ளன. அவை கி. பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தன என்பர். சிதைந்த தேர்க்கட்டைகளில் உள்ள சிற்பங்கள் அழகான வேலைப் பாடு கொண்டு திகழ்கின்றன. ஏதோ ஒரு காரணத்தால் தேரோட்டம் தடைபட்டதாம் ; காரணம் தெரிந்திலது.

இக்கோயிலைப் பாடியவர்கள் :

இக்கோயில் ஒரு வைப்புத் தலமாகும். திருஞான சம்பந்தர் தம் க்ஷேத்திரக் கோவையில், "அறப்பள்ளி அகத்தியான்பள்ளி" என்றும், திருநாவுக்கரசர் தம் அடைவுத் திருத்தாண்டகத்தில் "கமழ்கொல்லி யறைப்பள்ளி" என்றும், க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் "கொல்லிக் குளிரறைப் பள்ளி" என்றும் குறித்துள்ளமை கண்டு நோக்கத்தக்கது. அன்றியும், கொங்குமண்டல சதக ஆசிரியரும் இக்கோயிலைக் குறித்துள்ளார். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரும் தம் திருப்புகழில் இக்கோயிலில் உள்ள சுப்பிரமணியனைக் "கொல்லிமலை நாடா !" "கொல்லிமலை மேனின்ற பெருமாளே" எனத் துதித்துப் பாடியுள்ளார். அருணாசலக் கவிராயரின் புதல்வரான அம்பலவாணக் கவிராயர் என்பவர் இவ்விறைவன் மீது "அறப்பள்ளீச்சுர சதகம்" என்ற நூல் பாடியுள்ளார்.

கல்வெட்டுக்கள் :

இக்கோயிலில் இருபது கல்வெட்டுக்கள் உள்ளன. அவை பத்தாம் நூற்றாண்டு முதற்கொண்டு பதினாறும் நூற்றாண்டு வரையுள்ளன. இவ்விருபது கல் வெட்டுக்களில சோழர்காலக் கல்வெட்டுக்கள் அதிகம். மற்றும், விஜயநகர்,

கொங்கு முதலிய அரசுகளின் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் இடம் பெறுகின்றன. இக்கல்வெட்டுக்களின் மூலம் கோயிலுக்கு நிலங்கள் தானமாக விட்டமையும், பூந்தோட்டம் அமைத்தமையும், திருவிழாக் காலங்களில் உடுக்கை, மத்தளம் வாசிப்பதற்கு ஆட்கள் நியமித்தமையும், திருவிழாக்கள் நடைபெற பொன் முதலியன கொடுத்தமையும் அறியக் கிடைக்கின்றன.

திருப்பணி தேவை :

இக்கோயிலின் முன்வாயிற் கோபுரம் இடிந்து சிதைந்து காணப்படுகின்றது. மதில்சுவர் ஆங்காங்கே இடிந்து பழுதுற்ற நிலையில் இருக்கின்றது. சிறு தெய்வங்கள் உள்ள இடங்களும் பழுதுற்றுள்ளன. இக்கோயிலைத் திருப்பணி செய்தல் சிவநெறிச் செல்வர்களின் கடமையும், இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையினரின் கடமையுமாகும்.

இக்கோயிலின் கிழக்கேயுள்ள தீர்த்தங்கட்குச் (நீர் வீழ்ச்சிக்குச்) செல்லும் பாதையை நடைபாதையாகவாவது வசதியுடன் அமைத்தல் அவசியமாகும். பழம் பெருமை வாய்ந்த இத்தலத்திற்குச் சென்று அன்பர்கள் நற்பலன் அடைவார்களாக.

உ

சிவமயம்

அரசுவள்ளல் ஆளுடைய பிள்ளையார்

(மா. ப தியாகராஜன், பீ. ஏ.)

செல்வத்தில் மிக்கார் கலைச்செல்வத்தை வளர்க்கக் கலைஞர்களை ஆதரித்தல் அவர்கள் பெற்ற பொருட்செல்வத்தின் பயனாகும். செல்வத்திற் சிறந்தோர் வறியோரை ஆதரித்து அவர்களை மேன்மையுறச் செய்வது போன்று, அறிவில் மிக்கார் அறியாமையை அகற்ற மக்களுக்கு நல்லுரை வழங்குதல், நல்ல நூல்களை இயற்றுதல் இன்றி

யமையாப் பண்பாடாகும். இதுவே வள்ளன்மைக்குச் சிறப்பிலக்கணமாகும்.

நம்மில் ஒரு பகுதியினர் எளியோர் எக்காரணம் பற்றி யாவது முன்னேற்றமடைவார்களேயானால் அவர்களைக் கண்டு பொறாமை கொள்வதை இயல்பாகக் கொண்டுள்ளனர். குற்றம் செய்தவன் கெட்டுப்போகவேண்டு மென்று எண்ணுவதும் மனித இயற்கை. இந்த இயலுக்கு மாறாக நமக்கின்னல் விளைவித்தோரும் வாழவேண்டுமென் றெண்ணுவதே சால்புடையோர் பண்பாகும். எந்த எந்த விதத்தில் எளியோரை உயர்த்த முடியுமென்று எண்ணி முயலுவதே வள்ளல் தன்மையாகும். இப்படிப்பட்ட பண் பாட்டிற்கு இடையூறாக நிற்பது இனவேற்றுமையும், மத மாறுபாடுகளுமாகும். இறைவனின் உருவ பேதங்களால் உண்மையை யுணராது மதச் சழக்குகள் ஏற்படுகின்றதென் றெண்ணி இராமலிங்க சுவாமிகள் "இறைவனை அருட் பெருஞ்சோதி வடிவினனாக எண்ணி வழிபடுங்கள்; அத் தகைய அறிவுச் சோதி ஒவ்வொருவரிடமும் உள்ளது. அதை வெளிப்படுத்திக் காண்பதற்கு ஒவ்வொருவரும் கருணையுள்ளம் படைத்தவர்களாக ஆகவேண்டும். "ஜீவ காருண்யமே மக்களை உயர்த்தக்கூடிய பண்பாடு. அது இன்றேல் இறைவனை வழிபடுதல் பயனில்லை" என்று கூறினார். மக்களின் பசிப்பிணியை அகற்றி, அவர்களின் அறிவை விளக்க முற்பட்டவர் அச்சுவாமிகள். திருவள்ளுவர் உலகம் போற்றும் திருக்குறளாகிய அறநூலை யியற்றியருளி யிருந்தபோதிலும் இராமலிங்க சுவாமிகளை மட்டும் வள்ளலா ரென வழங்குவதன் காரணம், அவர்கள் எளியவர்களைக் கண்டு இரக்கங்கொண்டு மக்களின் அறியாமைக்குக் காரண மாய பசிப்பிணி நீங்கவேண்டுமென்றெண்ணியும், உயர்வு தாழ்வைக் கற்பிக்கும் ஜாதிமத வேற்றுமைகள் அகல வேண்டுமென் றெண்ணியும் பாடுபட்டதேயாகும். கடை யேழுவள்ளல்கள் பொருட் செல்வத்தை வாரி வழங்கி வள்ளல்களெனப் புகழ் பெற்றதுபோல் இராமலிங்க சுவாமிகள் மக்களிடை உண்மை அறிவு மேம்பட்டு அவர்கள்

ஒற்றுமையாக வாழவேண்டும் என்று அருட்பாடல்களையும் அற உரைகளையும் நூல்கள் வாயிலாகவும், பேச்சினலும் வாரி வழங்கி வள்ளலாரெனப் புகழெய்தினர். பொருளை வழங்கியவரை வள்ளல்களென்றும், அறிவை வழங்கியவரை வள்ளலாரென்றும் பாராட்டும்போது அருளை வழங்கிய ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளை எவ்வாறு போற்றுவது? அவரை வள்ளலரசு என்றுதான் கூறவேண்டும்.

உளுத்த வெள்ளெலும்பும் உதிர்ந்த சாம்பலும் பெண்ணுருவாகுமா என்றெண்ணவில்லை அவர். சிவநேசச் செட்டியார் தம்மகள் அரவு தீண்டி மாண்டதைத் தெரிவித்ததும் அந்த அத்தியைக் கொண்டுவரச் சொல்லி கபாலீச்சரத் தமர்ந்த எம்பெருமான்மேல் பதிகம்பாடிப் பூம்பாவையை உயிர்ப்பித்துத் தந்தனர். கொலைக்குற்றம் செய்தவர்கள் உய்வெய்த முடியுமா என்றெண்ணவில்லையவர். அவர்களும் உய்ய உபாயமுண்டென்று பின்வருமாறு பாடியருளியுள்ளார்.

"கொல்வாரேனும் குணம்பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே" என்றும்,

"மந்த ரம்அன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந் தும் வல்வினை, செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே"

என்றும் பாடியுள்ளார்.

அவர் பாடியுள்ள பதிகங்கள்தோறும் திருக்கடைக் காப்பினில் அவர் ஆணையிட்டருளிய பரிசுகள் அளவில. அப்பதிகங்களை யோதினல் போதும். அவர் நமக்கு அடைவிக்கும் பரிசுகளின் உயர்வு எண்ணிப்பார்க்கவும் முடியாதவையாக உள்ளன.

" வானில் அரசாள்வர் ஆணை நமதே"
" மன்னு சோதி ஈசனோடே மன்னியிருப்பாரே "
" பாரொடு விண் பரிபாலகரே "

என்றெல்லாம் கூறியுள்ளார்கள். அதுமட்டுமா? தம் திருமணத்திற்கு வந்திருந்த அனைவரையும் அருட்சோதியில் கலந்துய்யெய்தும்படி அருளினானன்றோ? அவர்களில் எவருக்கேனும் இருவினை ஒப்பு, சத்தினிபாதம் வரவில்லையே யெனக் கருதினரா? என்போல் நீவிரும் சோதியில் கலக்கலாமென்று வீண் அற உரை கூறிச் சென்றனரா? அங்கிருந்த யாவருக்கும் முத்தி கொடுத்துச் சென்றாரல்லரோ? அவரைப்போன்ற அருள்வள்ளல் அவருக்கு முந்தியும் இருந்திருக்கக் காண்கிலோம்; பின்னையும் இருந்திலர். இனி வருவார்களோ என்றெண்ணவும் இடமில்லையே. அவர் நமக்குக் கருணைகூர்ந்தருளியுள்ள பதிகங்களை ஓதி அவரருளியுள்ள பரிசுகளுக்குப் பாத்திரராக அமைவது மிக எளிமையான நெறியாகும். அப்படிப்பட்ட பயனளிக்கும் சொற்களே பயனுடைச் சொற்களாகும். ஏனையவை பயனில் சொற்களே யெனக் கூறிவிடலாம். பயனில் சொற்கள் பாராட்டுதலை இழித்துக் கூறுகிறார் திருவள்ளுவர்.

" பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல் "

அவரருளியுள்ள திருநீற்றுப் பதிகத்தைத் திருநீறணியும்போதெல்லாம் ஓதிப் பயன்பெறலாம்.

" மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப் பேசினல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே "

என்று தொடங்கும் பதிகத்தை அடியார் வழிபாட்டிற் கமைத்துக்கொள்ளலாம். அடியார்களெல்லாரும் வாழ வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்தல் அடியார் வழிபாடாகும். அவரியற்றியுள்ள நமச்சிவாயப் பதிகம்

பஞ்சாக்கர செபம் செய்வதற்கு முன் ஓதிக்கொள்ள வேண்டும். மற்று நாம் உய்ய சில பண்பாடுகளைப் பெற வேண்டுமென்று வேண்டிக்கொள்ளலாம். அப்படிப்பட்ட வேண்டுகோள்கள்

"ஒல்லையாறி உள்ள மொன்றி கள்ள மொழிந்து வெய்ய
சொல்லையாறித் தூய்மை செய்து காமவினை யகற்றி
நல்லவாறே உன்றன் நாமம் நாவில் நவின் றேத்த
வல்லவாறே வந்து நல்காய் வலிவலம் மேயவனே."

என்று தொடங்கும் பாடலமைந்த பதிகத்தில் உள்ளன. இவ்வளவும் இசையுடன் பாடி இருவேளை தினம் சிவபூஜை செய்தால் போதுமே. வீட்டுநெறி எளிதாகுமே.

சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சிக் கோடை வகுப்பு

நம் சமாஜ 61-ஆவது ஆண்டு விழா வரவேற்புக் குழுத் தலைவர் திரு. G. வரதராச பிள்ளையவர்கள் இவ்வாண்டு 22-4-67 முதல் 6-5-67 முடிய 14 நாட்களுக்குச் சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சிக் கோடை வகுப்பினை லால்குடி தம்பாச்சியாப் பிள்ளை அவர்கள் அறநிலையத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளார்கள்.

நாள்தோறும் சைவசித்தாந்த சாத்திரங்கள் பற்றிய விரிவுரையும் சிவஞான போதச் சூத்திர விளக்கமும் நிகழ்வுறும். மேலையூர்-தவத்திரு மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் அவர்களும் பூம்புகார் கீழ்த்திசைப் பண்பாட்டுக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் திரு. சி. இராமலிங்கம் எம். ஏ. அவர்களும் பிற பெரு மக்களும் பயிற்சியளிக்க இசைந்துள்ளார்கள்.

இப்பயிற்சியில் தமிழ்ப்புலமை, பட்டம் முதலியன பெற்று ஆசிரியப் பணியாற்றுவோர்களுக்கும் கல்லூரித் தமிழ் மாணவர்களுக்கும் சேர்வதற்குச் சிறப்பிடம் தரப்படும்.

இக்கோடை வகுப்பிற்குச் சேர விரும்புவோர் தங்கள் கல்வித் தகுதி, சமய நூற் பயிற்சி, சமயப்பணி குறித்த தங்கள் எண்ணங்கள் முதலிய விவரங்கள் குறித்து மனுவினைக் கூடிய விரைவில் திருக்குறள்வேள் திரு. G. வரதராசப் பிள்ளை அவர்கள் பி.ஏ., 7 வடக்கு வீதி லால்குடி, திருச்சி மாவட்டம் என்ற முகவரிக்கு எழுதுமாறு வேண்டுகிறோம்.

இப்பயிற்சியில் சேர்வோருக்கு உறையுளும் உண்டியும் கட்டணமின்றி அளிக்கப்பெறும். இவ்வாய்ப்பினைப் பயன் படுத்திச் சமய விளக்கம் கண்டு அன்பர்கள் சமயத்தொண்டுக்கு முன்வரும் வாய்ப்பினைப் பெற வேண்டுகிறோம்.

(துணையாசிரியர்)

நிறை பெருங் கருணை

(பு. மா. ஜயசெந்தில் நாதன், காஞ்சீபுரம்.)

உலகுக்கெல்லாம் முதல்வராக விளங்குகின்ற சிவ பெருமான் பல உருவங்கள் கொண்டிலங்கி, மக்கட்கு அவரவர் பக்குவத்துக் கேற்றவாறு அருள் புரிந்து ஆட் கொள்ளுகின்றார். இறைவனுடைய பேரருளால்தான் உயிர்கள் உய்வடைகின்றன. மல இருளுற்றுத் துன்ப முறும் நம்மை யாட்கொள்ளும் பொருட்டு இறைவன் நமக் கருளும் நேசமே கருணை எனப்படும். இக்கருணையே இறை வனின் எண்குணங்களுள் ஒன்றாகிய பேரருளுடைமை எனப்படுகிறது. இறைவன் கருணை வடிவானவன். அவன் தன் தொழிலைக் கருணையால் நடத்துகின்றான். இறைவ னுடைய கருணை உருவம் பற்றிய தன்மையைப் பெரிய புராணப் பாடல் நமக்கு விளக்குகிறது.

''கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற் றம்பலத்து ணின்று
பொற்புட னடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி''

இறைவன் உயிர்கள் மீது கொண்டுள்ள கருணையால் யோகவடிவம் போகவடிவம் கோரவடிவம் ஆகிய வடிவங் களைத் தாங்கி நின்று, உயிர்கட்கு ஞானம், சுகபோகம் முதலியவற்றையருளி, பிறவிக்குக் காரணமாகிய வினையை யும் அழித்து இன்னருள் புரிகின்றான். இறைவனின் அருவம் உருவம் அருவுருவம் ஆகிய தோற்றங்களனைத் தும் உயிர்களின் பிறப்புவினையைக் கழிக்க வந்த கருணை யின் வடிவே என்ற கருத்தைச் சித்தியாரிலே காணலாம்.

"அவ்வுருவம் மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவு காணே''

எல்லையற்ற பரப்புடையது கடல். இறைவனுடைய கருணையும் எல்லையற்றது. இறைவன் கருணைக் கடலாக விளங்குபவன். கருணாகரன் என்பது அவனுக்குரிய சிறந்த பெயர்களுள் ஒன்று. இறைவனுடைய தொழிலும் கருணைத் தொழில்.

“ வந்திமை யோர்கள் வணங்கியேத்த
மாக்கருணைக் கடலாய் அடியார்
பந்தனை விண்டற நல்கும் எங்கள்
பரமன் பெருந்துறை ஆதி ”

“ பாச மானவை பற்றறுத்து உயர்ந்ததன்
பரம்பெருங் கருணையால்
ஆசைதீர்த்து அடியார் அடிக்கூட்டிய
அற்புதம் அறியேனே ”

“ கடைபடாவண்ணம் காத்தெனையாண்ட
கடவுளே கருணைமாகடலே ”

“ மூன்னீர் நஞ்சு அமுது செய்தாய் கருணாகரனே ”
(திருவாசகம்)

“ திருந்தாத வாள் அவுணர் புரமூன்றும் வேவச்
சிலைவளைவித் தொருகருணையால் தொழில்பூண்ட
சிவனை ”
(சுந்தரர்)

இறைவன் மாட்டு அமைந்துள்ள பெருங்கருணைத் திறத்தை மாபாடியம் நமக்குப் பலவிடங்களில் எடுத்துணர்த்துகிறது.

“ ஐந்தொழில் செய்யும் முதல்வன் மாட்டு.............. பெருங்கருணைக்கும் சுதந்திரத்திற்கும் இழுக்கின்மையின்”
(பிரமாண : பொது : 3 அதி.)

“ அவனது பெருங்கருணை உயிர்கள் மாட்டு ஒருங்கே நிகழாத வண்ணம் தடுத்து நிற்கும் உயிர்க்குற்றமாகிய அவ்வம்மல சத்தியின் வழி நின்று............”
(பிரமாண : பொது : 2 சூத்.)

எனவே இறைவனுடைய கருணை மற்ற எக்கருணையினும் பெருமையுடையதாம். ஆதலின் அது பெருங்கருணை எனப்படும்.

இப்பெருங்கருணைத் தன்மை இறைவனை வழிபடுகின்ற அடியார்களிடத்தும் அவரவர் வழிபாட்டு மேன்மையினால் அமைந்திருத்தல் இயல்பே. சிவத்தை வழிபட்டுச் சிவத்தன்மை பெற்று விளங்குதல்போன்று, அப்பெருமானின் தன்மையாகிய பெருங்கருணை அவரை வழிபட்டுய்யும் அடியவர்களிடத்தும் அமைந்திருந்தது. அத்தகைய ஒரு புனித வரலாறே மெய்ப்பொருள் நாயனாருடையதாகும்.

இந்நாயனார் சரிதத்தில் பெருங்கருணை இடம்பெற்று விளங்குகிறது. இவர் திருவேடமே (சிவ வேடமே) மெய்ப்பொருள் எனத் தெளிந்த சிந்தையுடையவர் திருக்கோவலூர் மன்னர். "தத்தா நமரேகாண் எனச் சொல்லி வானுலகம் பெற்றவன்" என்று திருத்தொண்டர் திருவந்தாதி இம்மன்னரைக் குறிக்கிறது. "தத்தா நமரேகாண் என்ற மிலாடுடையார்" என்பது கல்வெட்டு. மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனக் கொண்டொழுகிய காரணத்தால் இவர் மெய்ப்பொருள் நாயனார் என்னும் பெயர் பெற்றார். சிவனடியார்களைப் பேணி வாழ்ந்து வந்தார். அறநெறிமாறின் உலகிற்குத் தீங்கு விளையுமாதலின் அந்நெறி வழுவாமற் காத்தார். ஆலயங்களில் பூசை, விழா, நிபந்தங்கள் முதலியன குறைவின்றி நடந்து வருதற்குரிய முறைகளைச் செய்வித்து, அரசியலைச் செம்மையாக நடத்தி வந்தார்.

உலகில் என்றும் எல்லாமும் ஒன்றாக இருப்பதில்லை நல்லனவும் தீயனவும் விரவியே உள்ளன. எனவே ஒருவர் எத்துணை நல்லவராக உலோகோபகாரியாக விளங்கிடினும் அவருக்கும் உலகில் எங்கேனும் ஓரிடத்தே பகைவரிருப்பர் என்பதை நம் காலத்துக் காந்தியடிகள் முதலியோருடைய வரலாற்றி லிருந்தும் அறிகிறோம். அது போன்று நம் நாயனார்க்கும் முத்தநாதன் என்னும் பகைவன் இருந்தான். இவன் ஒருவனே அவருக்குப் பகைவனாக விளங்கினான் என்பதைச் சேக்கிழார் "ஓர் மன்னன்" எனக் கூறியுள்ள திறம் கருதத் தக்கது. பன்முறையும் முயன்று வெல்லமாட்டாமையை உணர்ந்து, வஞ்சக வழி

யில் மறைக்க எண்ணினன். மறைக்கத் துணிந்த அச் செயலைத் தம் வாயாற் கூற விரும்பாத சேக்கிழார் பெருமான் "செப்பரு நிலைமை யெண்ணி" என்றார். நாயனாரின் சீலவுள்ளமறிந்து, பொய்த்தவ வேடம் பூண்டு, வஞ்சகக் கவளி யேந்தி நாயனாரின் மனையை நாடிச் சென்றான். தத்தனின் தனிக் காவலையும்மீறி அவன் உரையையும் மதியாது உட்சென்று, நாயனாரிருந்த அறைக்குள் சென்று புகுந்தான். நாயனார் வந்த அடியவரை வணங்கி வரவேற்று, பெருமகிழ்வுற்று ஆசனத்து இருத்தி உபசரித்தார். அடியவர் பணித்தபடியே தம் தேவியை அவ்விடத்தினின்றும் போக்கி, அடியவரை நோக்கித் தமக்குபதேசம் அருளுமாறு வேண்டிப் பணிந்தார். தீய புத்திக்கு நாதனாக விளங்கிய முத்தநாதனும் தான் எண்ணியதை எண்ணியவாறே செய்து நிறைவேற்றினன். "தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய, மெய்த்தவ வேடமே மெய்ப் பொருள் எனத் தொழுது வென்றார்'—என்பது சேக்கிழார் பெருமானின் வாக்கு, இங்குச் சேக்கிழார் "வென்றார்" என்ற சொல்லை நாயனார்க்குச் சார்த்திக் கூறியுள்ள திறம் யாவரும் அறிந்து போற்றுதற்குரியது.

தத்தன் உட்புகுந்து, வந்த வஞ்சகனை எறிய வாளை ஓச்சினன். "தத்தா நமர்" என்ற நாயனார் வாக்கு அவனைத் தடுத்தது. ஆணைக்குக் கட்டுப்பட்ட தத்தன் மன்னன் குறிப்பில் நின்றான். "எம்பிரான் அடியார் போகமீதிடை விலக்காவண்ணம் கொண்டுபோய்விடு" என்று மன்னவன் பணித்தான். அவ்வாறே அவ்வடியவனை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான். செய்தியறிந்து சினந்துவந்த மக்களுக்கெல்லாம் அரசனது ஆணையைக் கூறி, வழிவிலகி நிற்குமாறு செய்து அழைத்துச் சென்றான். கானம் வரை சென்று அக்கொடியவனை விட்டு மீண்டான். தான் தீதிலா வண்ணம் விட்ட சொற்றிறம் கேட்கவேண்டி ஆவிதாங்கி நிற்கும் மன்னவரிடத்துச் சென்று, இடையூறின்றி அடியவரை விட்டுவந்த செய்தியினைக் கூறினன். அவ்வாறு கூறி நின்ற தத்தனை நோக்கி நாயனார் நிறை பெருங் கருணை செய்தார். "இன்றெனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்"—எனனும் தொடரில் நாயனாரின் அடங்கா

மகிழ்ச்சி புலப்படுகிறது. அதன் காரணமாகவே நின்ற தத்தனை நோக்கி நிறை பெருங் கருணை கூர்ந்தார். "ஞானவாளேந்தும் ஐயன்" என்ற திருவாசகக் கருத்துப்படி ஆசிரியன் உபதேசம் ஞான வாளாய் மும்மலச் செருக்கைச் சேதிக்கும் தகைமையதாய் விளங்கி, பொய்த்தவ வேடங்கொண்டு வந்தவனின் செய்கை ஆசிரியன் செயலாய் முடிந்து, அவருக்கு வெற்றியைத் தந்தது. தத்தனது செய்கை மன்னரின் வெற்றிக்குதவி அதை நிறைவு பெறச் செய்தது. ஆதலின் அதற்குக் காரணமாய் இருந்த அத்தத்தனை நோக்கி நிறைபெருங் கருணை செய்தார் என்ற கருத்து சிந்தித்துணரற்பாலது.

இறைவனும், மெய்ப்பொருளைச் சிவவேடமாம் திருவேடத்திலே கண்டு, அவ்வேடத்திற்கே தன் மெய்யைக் கொடுத்த நாயனார்க்குத் தம் மெய்ப்பொருளுருவை அவர் தியானித்தபடியே அவருக்கு எதிர் நின்று காட்சி கொடுத்து அருள் செய்தார்.

"வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கடியேன்"

பழந்தமிழர் சமயநிலை

N. சரசுவதி

இந்து சமயம் :

"உலகில் அறநிலை தடுமாறி மறம் தலையெடுக்குமானல் அறத்தை நிலைநாட்டும் பொருட்டு நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன்" என்று கண்ணன் கூறியதாக வடமொழியில் ஒரு சுலோகம் உண்டு. அதன்படி திருமால் வியாசராக அவதரித்தார். திருமாலுக்குப் பத்து அவதாரங்களைத் தவிர வியாசர் முதலாகிய வேறு பதினான்கு அவதாரங்களும் உண்டு என்பது வைணவர் கொள்கை.

அவ்வாறு உலகில் அறநிலை தடுமாறிய காலத்தில் வியாசர் தோன்றி பதினெண் புராணங்களை உலகினர்க்குக்

கூறி அவற்றின் மூலமாக அறத்தை நிலை நாட்டினர் என்று கந்த புராணமும் கூறும். அதே வியாசர் சமயத்தை நிலை நாட்டுவதற்கு வியாச சூத்திரம் என்றொரு நூலை இயற்றினர். அது எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையான கொள்கைகளை விளக்குவது ஆகும்.

மூதுரையில்,

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர்.

என்று ஔவையார் கூறியதில் முனிமொழி என்பதற்கு வியாச சூத்திரம் என்று ஆறுமுக நாவலர் பெருமான் பொருள் கூறினர். (நான்காம் பாலபாடத்தில் காண்க). அதற்குப் பேருரை கண்டவர் நால்வர். அந்நால்வரும் முற்றும் உணர்ந்தவர்கள். வடமொழியில் தீர்க்கதரிசிகள் எனப் படுவர்.

சங்கரர் :

அவருள் ஆதி சங்கரர் ஒரு மாபாடியம் இயற்றினர். அதற்குச் சங்கரபாடியம் அல்லது பாஷியம் என்பது பெயர். அவர் கொள்கை உலகில் ஒரே ஒரு பொருள்தான் உண்டு. அப்பொருள் இறைவன். அவருடைய் பிரதி பிம்பங்களே ஆன்ம சொரூபமும் (உயிர் நிலையும்) உலக சொரூபமும் என்பது. ஆகவே விவகாரத்தில் பரமான்மா, ஜீவான்மா எனப்படும் பொருள்கள் பரமார்த்தத்தில் பரமான்மா ஒன்றேவாக நிற்கும் என்பது அவர் கொள்கை. ஆகலினல் அது அத்வைத மதமென்று சொல்லப்படும். (இரண்டும் அல்லாதது ஒரு பொருள்) அதனல் அவர் மதம் ஏகான்ம வாதம் என்னப்படும்.

மத்துவர் :

அவ்வியாச சூத்திரத்துக்கு மத்துவாச்சாரியார் என்பவரும் ஒரு மாபாடியம் இயற்றினர். அதற்கு மத்துவ பாஷ்யம் என்பது பெயர். அவர் கொள்கை உலகில் இரண்டு பொருள்கள் உண்டு. ஒன்று உயர்ந்தது, மற்றொன்று தாழ்ந்தது. உயர்ந்தது பரமான்மா. தாழ்ந்தது ஜீவான்மா. அதனால் அவர் மதம் துவைதம் என்று கூறப்படும். துவைதம் இரண்டுடையது.

இராமானுஜாச்சாரியார் :

இவரும் மேற்படி வியாச சூத்திரத்திற்குப் பாடியம் இயற்றினர். அதற்கு இராமானுஜ பாடியம் என்பது பெயர். அவர்கொள்கை உலகில் மூன்றுபொருள்கள் உண்டு. (ஒன்று) சித்து. (இரண்டு) அசித்து. (மூன்று) ஈஸ்வரம் என்பன. அவற்றுள் சித்து — ஜீவான்மா. அசித்து — உலகம். ஈஸ்வரம் — கடவுள் தன்மை உடையது. இது விசிஷ்டாத்துவைதம் என்று சொல்லப்படும். விசிஷ்டாத்துவைதம் என்பதற்கு நல்ல முறையில் கூறப்படும் இரண்டற்ற கொள்கை என்பது பொருளாகும்.

நீலகண்ட சிவாச்சாரியார் :

இவருக்குச் சீகண்ட சிவாச்சாரியார் என்றும் பெயர் உண்டு. இவரும் அவ்வியாச சூத்திரத்துக்கு ஒரு மாபாடியம் எழுதினர். அதற்குச் சீகண்ட பாஷ்யம் அல்லது நீலகண்ட பாஷ்யம் என்பது பெயர். அவர் கொள்கை உலகில் மூன்று பொருள் உண்டு. (1) பதி, (2) பசு, (3) பாசம் என்பன. பதி = இறை, பசு = ஆன்மா, பாசம் = உலகியற் பொருள்கள் என்பன. இதற்குச் சுத்தாத்துவைதம் என்பது பெயர். இரண்டற்ற தன்மையைத் தெளிவாக விளக்குவது என்பது அதற்குப் பொருள் ஆகும். இதனைத் திருமூலர் திருமந்திரத்தில்,

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே

எனக் கூறப்படுகிறது.

இந்நான்கு மாபாடியங்களும் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளன. இவற்றால் இந்து சமயத்தின் கொள்கைகள் நான்கு வகைப்படும் என்று அறியக் கிடக்கின்றது.

அத்துவிதம் என்பதற்குச் சைவர்கள் கூறும் பொருள்

சைவசித்தாந்தம் சுத்தாத்துவிதம் என்று கூறப்படும். அத்துவிதம் — ந + துவிதம் என்ற சொல் வடமொழிப் புணர்ச்சி விதிப்படி அத்துவிதம் என மாறி நிற்கும். ந என்னும் ஓரெழுத்து ஒரு மொழி மூன்று பொருள் தரும. அவை அன்மை, இன்மை, மறுதலை என்பன. இம் மூன்று பொருளில் இச் சொற்கு இன்மைப் பொருள் கொண்டால், அத்துவிதம் இரண்டில்லை எனவே ஒன்று எனவும், மறுதலைப் பொருள்கொண்டால் இரண்டின் வேறாயது எனவே ஒன்று பொருள்பட்டு உலகிற்கு இறைவன் ஒருவனே என்னுங் கருத்துத் தரும்.

இங்ஙனமின்றி அன்மைப்பொருள் கொள்ளுங்கால் இரண்டு அல்லாதது இரண்டாகவும் நிற்கும் ஒன்றாகவும் நிற்கும் என்பது பொருள். இதுவே சுத்தாத்துவிதக் கொள்கை. ஆக அத்துவிதம் என்ற சொல் 'அவையே தானேயாய்' என்னும் சிவஞான போதச் சூத்திரத்தால் விளக்கப்படுகிறது. அச் சூத்திரப்பொருள் — அவையேயாகி, தானேயாகி, அவையேதானேயாகி என மூன்று வகையாகப் பொருள் கொள்ளப்பட்டு, முறையே உடலும் உயிரும், கண்ணொளியும் சூரியன் ஒளியும, கண்ணொளியும் ஆன்ம போதமும் போல, ஆன்மாவாகியும், ஆன்மாவின்

வேறாகியும், ஆன்மாவிற் கலந்தும் நிற்பன என்பது. இதுவே சுத்தாத்துவிதம் என்பதன் பொருள்.

நகரம் கூறும் மூன்று பொருள்களும் சைவர்க்கு உடன்பாடு. ஒன்று என்று கூறியது உலகிற்கு ஒருவனே கடவுள் என்று பொருளாகக் கொண்டு உடன்படுவர். அது வேதத்தில் 'ஒன்றே பொருள் துவைதம் இல்லை' என்ற வாக்கியத்திற்குப் பொருளாகக் கொள்க. அந்த ஒன்று என்று குறிக்கப்படுவது பதிப் பொருள். திருவாசகத்தில் 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' என்றும் வேதக் கருத்தை விளக்குகிறது.

அது சிவஞானபோதத்தில் "ஒன்றென்ற தொன்றே காணொன்றே பதி பசுவாம்" (சிவஞானபோதம் 2-ஆம் சூத்திரம் முதல் அதிகாணம்) எனக் கூறப்படுகிறது.

வேதத்தில் கூறும் இவ்விரு தொடரையும் அநுபவித்து திருவாவடுதுறை ஆதீனப் புலவர் பெருமான் கச்சியப்ப முனிவர் தமது நூலாகிய பேரூர்ப் புராணத்தில்,

ஏக மேயெனு மிருக்கெனி னிருக்கினுட் பொருள்கேள்
ஏக மேபதி பலவல வெனுமது காண்டி
ஏக மேயெனச் சுட்டுவா ஞெருவனிங் குளனவ்
வேகன் போலல னிருண்மலத் தோடுள னிவனே.
மன்ற வேதமத் துவிதமென் றுரைத்திடு மரபால்
ஒன்ற லாற்பொரு ளிலையெனி னுணர்த்துதுந் தெளிதி,
என்றும் வேறன்மை யுணர்த்துமிக் கிளவியே யிதனுல்
நின்ற வாருயிர் பலவுந்தா ஞய்நிற்கு நிமலன்

என இவ்விரு செய்யுள்களால் விளக்குகிறார் (ஏழாவது காலன் வழிபடு படலம் பாடல் (52, 53)

எனவே இறைவன் பொன்னும் பணியும் (நகை) போல அபேதமோ, இருளும் ஒளியும் போல பேதமோ, சொல்லும் பொருளும் போல பேதாபேதமோ என்னின் இம்

மூன்று வகையாகவும் நிற்பான். பதி பசு நிலையை நோக்கப் பேதமாகவும், ஆன்மா உடன் நின்று இயக்கலால் பேதாபேதமும், அவற்றோடு கலந்து நிற்றலால் அபேதமும் ஆக மூவகை நிலையில் நிற்பன்.

இக்கருத்தைச் சம்பந்த சுவாமிகள்

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே

என அருளியிருப்பதை அறிக.

இறைவன் ஆன்மாவினிடம் நின்று அதனை இயக்கும் தன்மையை, அப்பர் பெருமான்,

'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'

என்னும் திருத்தாண்டகத்தால் விளக்கி அருளுகின்றார்.

சமாஜத் தேர்வுகளின் பாடத் திட்டம்
இளஞ் சைவப் புலவர்

1. **இலக்கணம்:** நன்னூல் காண்டிகை (ஆறுமுக நாவலர்) யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் மட்டும்.)

2. **இலக்கியம்:** திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அநுபூதி, திருக்குறள் அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்) சுந்தரர் தேவாரம் முழுவதும்.

3. **சாத்திரம்:** திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம், திருவருட்பயன், கொடிக்கவி, வினாவெண்பா.

4. **உரைநடை:** சைவத்தின் சமரசம் (திரு. வி. க.) வாகீசர் அல்லது மெய்யுணர்வு (சிவக்கவிமணி) பட்டினத்

தார் வரலாறும் நூலாராய்ச்சியும், தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும் (கா.சு. பிள்ளை M.A.,M.L.) பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் (ஆறுமுகநாவலர்)

சைவப் புலவர்

1. இலக்கணம் : தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்) சொல்லதிகாரம் (சேனாவரையம்) பொருளதிகாரம் (இளம் பூரணம்) தருக்கசங்கிரகம் (சிவ ஞான முனிவர்)

2. இலக்கியம் : பெரிய புராணம் (திருநாவுக்கரசர் புராணம் முழுவதும்), சம்பந்தர் தேவாரம் முழுவதும், திருவாசகம் முழுவதும், ஒன்பதாந் திருமுறை முழுவதும்.

3. சாத்திரம் : சிவஞானபோதச் சிற்றுரை, சிவ ஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை) சிவப் பிரகாசம், சங்கற்ப நிராகரணம்.

4. உரைநடை : சைவ சித்தாந்த ஞானபோதம் (மறைமலையடிகள்) சிவஞான சித்தியார் ஆராய்ச்சி, (ந. சிவ குருநாத பிள்ளை) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார்) சிவஞான முனிவர் உரை நடை நூல்கள், பெரியபுராண சூசனம் (ஆறுமுக நாவலர்)

சமாஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க

தேர்வு எழுத விரும்புவோர் பாடதிட்டத்திற் குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். முதல் வகுப்பில் தேர்ச்சிபெறும் ஆளைஞர்க்கு அதற்கென அன்பரொருவர் வழங்கிய மூலப் பொருளினின்று வரும் வருவாயைக் கொண்டு பரிசு வழங்கப் பெறும். இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் மூன்றும் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் நான்கும் பதிவுக் கட்டணம் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் இறுதி நாள் 30-9-67. தேர்வு நவம்பர் மாதம் மூன்றும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும்.

மதிப்புரை

மலேயா அருள்நெறித் திருக்கூட்டத்தார் கோலாலம்பூரில் வெளியிட்ட சைவப்பெரியார் திரு.கா. இராமநாதன் செட்டியார் அவர்களின் முதலாண்டு நினைவு மலர் வரப்பெற்றேம்.

இம் மலரினைக் காணும்போது மனத்தில் பழமையான எண்ணங்கள், அவருடன் சேர்ந்து பழகும்போது ஏற்பட்ட பல நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்ருய் வந்து துன்பமூட்டுகின்றன.

திரு. கா. ரா. அவர்கள் திருவதிகைக் குடமுழுக்கு விழாவில் ஞானியார் அடிகள் தலைமையில் பேசினுர்கள். அப்போதுதான் முதன் முதல் அவர்களைக் காணும் வாய்ப்பினைப் பெற்றேன். அன்று அவர்கள் ஞானசம்பந்தர் வரலாற்றில் திருமருகல் நிகழ்ச்சியை எடுத்துக் கூறிய பான்மை — அதிலிருந்து மக்களுக்குத் தொண்டுள்ளம் வேண்டுவதின் இன்றியமையாமையை வற்புறுத்திக்கூறும் முறை — இன்னும் என் செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. பின் யான் மயிலம் சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் எழுத்தாளராயிருந்தபோது மயிலத்துக்கருகிலுள்ள திருவக்கரை என்னும் பாடல் பெற்ற தலத்தின் அருகில் எறையூர் எனும் சிற்றூரில் சேரித் தொண்டுக்காகச் சென்னையிலிருந்து பல தொண்டர்களுடனும் சுவாமி சர்வக்ஞானந்தா எனும் பெயரிய இராமகிருட்டின மடத்துத் துறவியரொருவருடனும் வந்தார். அவ்வமயம் அப்பெரியாருடன் கூடவேயிருந்துவந்தேன். பல அண்மையிலுள்ள சிற்றூர்களுடன் தொடர்பு கொண்டு பொது மக்களுக்கு நல்லன கூறி வந்தோம். அஞ்ஞான்று அப்பெரியார் தொண்டர்களை ஆளாக்கி ஊக்கிய திறம் கண்டு மிக உளம் பூரித்தேன். சிலர் தலைமையேற்று ஒரு செயலைச் செய்ய முற்படின் வேறு ஆளாக மாறி விடுவர். அப்படியல்லாமல் இவர் அங்குள்ள தொண்டர்களுடன் தொண்டராய் இன்முகமாய்ப் பேசி

தொண்டுகளை எவ்வாறு செய்யவேண்டும் என்பதைத் தாமே முன்மாதிரியாய்ச் செய்து காட்டி எல்லோரையும் களிப்புறச் செய்தார். பின்னர் 1944–ஆம் ஆண்டு நெல்லை மாவட்டத்தில் பாவநாசத் தலத்தில் சமாஜச் சார்பில் சைவசித்தாந்தக் கோடை வகுப்பு நிகழ்ந்தபோது இவர்களுடன் கலந்து நெருங்கிப் பழகும் வாய்ப்பு முண்டாயிற்று.

செட்டியார் அவர்களிடத்து நாம் மிகவும் உரிமையுணர்ச்சியோடு பழகலாம் ஒரு சமயம் பாவநாசத் திருக்கோயிலில் ஒரு சொற்பொழிவு திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. இறுதியில் என்னை அப்போது சமாஜச் செயலாளராயிருந்த திரு. கா. ரா. அவர்கள் நன்றி கூறக் கட்டளையிட்டார்கள். நான் நன்றி கூறும்பொழுது செயலாளருக்குப் பதில் தற்காலிகமாக அத்தாட்சிபெற்ற அலுவலனாக நான் நன்றி கூற நிற்கின்றேன். (Power Agent) என்று கூறி என் பணியையாற்றினேன். அச் செய்தியைப் பலவிடங்களில் கூறி என்னைப் புகழ்ந்து ஊக்கினார்கள். அக்கோடை வகுப்பு நிகழ்ந்த சமயம்தான் எனக்கு முதல் மகன் பிறந்தான். அவன் நலம் பற்றிப் பார்க்கும் சமயங்களில் எல்லாம் உசாவுவார்கள்.

பின்னர் சமாஜச் செயலாளராயிருந்தே அவர்கள் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. சீர்காழி மாநாடு, சிவகாசி மாநாடு, பழநி மாநாடு முதலிய பல மாநாடுகளில் அவர்களுடனுறைந்து அவர்கள் தொண்டுகளைக் கண்ணாரக் கண்டின்பம் துய்த்துள்ளேன்.

அவர்கள் தம் பிற்காலத்துப் பேசுவதைவிடச் செயல் முறையைப் பெரிதும் விரும்பினார்கள். மக்களுக்குச் சமய விளக்கம் கூறுங்கள்; இறைவனை எண்ணக் கற்றுக் கொடுங்கள் என்பன போன்ற பல உண்மைகளை வலியுறுத்திக் காட்டியதோடு அவ்வாறே தாமும் செய்துவந்தார்கள். "அந்தர் யோகம்" என்ற முறையில் சமய வாழ்வு வாழ வழி வகுத்துத் தந்தார்கள்.

மலேயா வாழ் சைவ மக்களுக்கு அவர்கள் வாழ்க்கையில் சமய வாழ்வு மலரச் சிறந்த தொண்டு ஆற்றினுர்கள். அத்துடன் அவர்கள் எண்ணம் அமைந்துவிடவில்லை. உலகெங்கும் வாழக் கூடிய இந்து மக்கள் தங்கள் சமய ஒழுக்கம் அறியாது துன்புற்றுக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்குச் சமய வாழ்வினை மலரவைக்கச் சிறந்த தொண்டர்கள் தேவை. பீஜித் தீவு, தென்னுப்பிரிக்கா முதலிய யிடங்களில் வாழக்கூடிய இந்து மக்களுக்குச் சமய வாழ்வு வாழக் கற்றுக்கொடுக்கவேண்டும் என்று அவர்கள் பல்கால் வருந்திக் கூறியதுண்டு. அக்கனவு நனவாகும் நற்காலத்தை இறைவன் அருள் பாலிப்பானுக.

இன்னும் இவை போன்று பல எண்ணற்ற எண்ணங்கள் மனத்தில் முந்திக்கொண்டிருக்கின்றன. நம் சமாஜத்தின்பால் அவர்கள் கொண்டிருந்த அன்பு அளவிடற்பாலதன்று. சிறப்பு மாநாடொன்றினையே மலேயாவில் கூட்டியிருக்கிருர்களெனில் அதற்குமேல் சமாஜத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள பற்றிற்கு வேறு சான்றும் வேண்டுமோ ? அவ்வப்போது நல்ல கருத்துக்களை சமாஜச் செயலாளருக்கு வழங்கி ஊக்கம் தந்துகொண்டிருந்தார்கள். சமாஜ மணி விழாவுக்கென்றே மலேயாவிலிருந்து வந்து நம் தமிழ் மண்ணிலேயே குஞ்சித பாதத்தின் திருவருளில் தோய்ந்தார்கள். அச்செயல் நேற்று நடந்ததுபோலிருந்தாலும் நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும் வாள் காலதத்துவமாதலின் ஒரு ஆண்டுக்கு மேல் ஆயிற்று. அவர்கள் முதலாண்டு நினைவு மலரினை நன்றி மறவாச் சின்னமாகக் கோலாலம்பூர் வாழ் பெருமக்கள் வெளியிட்டுள்ளனர்; திரு. செட்டியார் அவர்கள் எவ்வளவு பெருமை மிகுந்தவர்களோ அவ்வளவு பெருமை மிக்கது அம்மலர் என்று சுருங்கக் கூறலாம். படிக்க எடுப்போர் அதைப் படித்து முடித்த பின்னரே மறு வேலை

பார்ப்பர் என்பதுறுதி. ஒவ்வொரு செய்தியும் மிகச் சிறந்ததாயிருக்கிறது. மேலும் சமயப் பெருமை குறித் துள்ள எட்டுக் கட்டுரைகளும் அம்மலரை அணி செய்கின் றன. நல்ல வழுவழுப்பான தாளில் இம்மலர் முழுவதும் அச்சடிக்கப்பட்டுள்ளது. திரு. செட்டியார் அவர்கள் வரலாறு, தொண்டுத் தொடர்பான அணிமிகு படங்கள் பல இம்மலருக்குத் தலையாய ஏற்றத்தைத் தருகின்றன. 58 பக்கங்கள் கொண்ட இம்மலர் (D/Crown Size) யாவரும் படித்துப் பயன் பெறத்தக்கது. விலை குறிக்கப்பெறவில்லை. அன்பர்கள் கோலாலம்பூர் மலேயா அருள் நெறித் திருக் கூட்டச் செயலாளரிடம் இது பற்றி எழுதி மலரை வர வழைத்துப் படித்து மணத்தைப் பெற்றின்பம் துய்க்க வேண்டுகின்றோம்.

(அம்பை)

தெய்வ உணர்ச்சி என்னும் நூல் ஒன்று வரப்பெற் றோம். இதில் பின்னலூர் துரியானந்தர் அவர்களின் வாழ்க்கை வரலாறும் தெய்வ உணர்ச்சி எப்படி எய்தலாம், எய்திய பின் அடையும் பயன் யாது? முதலியன பற்றிச் சுருக்கமாயும் உள்ளன. தெய்வ நம்பிக்கை குறைந்த இக் காலத்து தெய்வ உணர்ச்சியைத் தூண்ட இந்நூல் பெரி தும் உதவும் என்பதுறுதி. பல அரிய அனுபவங்களும் இந் நூலில் காணப்பெறுகின்றன. ஆதலின் அன்பர்கள் வாங்கிப் படித்துத் தெய்வகல உணர்ச்சி வாய்க்கப் பெறு வார்களாக. 24 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை 50 காசுகள். தபாற் செலவு வேறு. வேண்டுவோர் துரியானந்தர், ஸ்ரீ இராமலிங்க நிலையம், பின்னலூர் அஞ்சல், சிதம்பரம் தாலுகா என்ற முகவரிக்கு எழுதி நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

(அம்பை)